ஏப்ரல் மற்றும் மே 2016 மாதங்களுக்கு சம்பளம் வழங்கும் அதிகாரம்

பள்ளிக் கல்வித்துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை—600 009.

கடித எண்.12770/அகஇ/2016—1, நாள் 02.06.2016

அனுப்புநர்
திருமதி த.சபிதா, இ.ஆ.ப.,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை—35.
மாநில தலைமைக் கணக்காயர், சென்னை—18/35.
கருவூல கணக்கு ஆணையர், சென்னை—15.

ஐயா,

பொருள் பள்ளிக்கல்வி – மாண்புமிகு முதலமைச்சரின் அறிவிப்பின்படி 2013—2014ம் கல்வியாண்டில் 50 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தப்பட்டு அப்பள்ளிகளுக்கு தற்காலிகமாக தோற்றுவிக்கப்பட்ட 50 தொடக்கப் பள்ளி தலைமையாசிரியர், 50 உயர்நிலைப் பள்ளி தலைமையாசிரியர், 250 பட்டதாரி ஆசிரியர் ஆக மொத்தம் 350 பணியிடங்களுக்கு ஏப்ரல் மற்றும் மே 2016 மாதங்களுக்கு விரைவு ஊதிய ஆணை (Pay Authorization) வழங்க கோருதல் – குறித்து.

பார்வை
1.அரசாணை (நிலை) எண்.185, பள்ளிக் கல்வித் (அகஇ) துறை, நாள் 17.9.2013.
2.அரசாணை (1டி) எண்.89, பள்ளிக் கல்வி (அகஇ) துறை, நாள் 12.3.2015.
3.பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை—6 அவர்களின் கடித ந.க. எண்.001240/எல்/இ3/2016, நாள் 12.01.2016.

----

பார்வை ஒன்றில் காணும் அரசாணையில் 2013—2014ம் கல்வியாண்டில் 50 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தப்பட்டு, அப்பள்ளிகளுக்கு தற்காலிக பணியிடமாக 50 தொடக்கப் பள்ளி தலைமையாசிரியர் (ரூ.9300—34800 + தரஊதியம் 4500/—), 50 உயர்நிலைப் பள்ளி தலைமையாசிரியர் (ரூ.9300—34800 + தரஊதியம் 4800/—) மற்றும் பள்ளி ஒன்றுக்கு 5 பட்டதாரி ஆசிரியர்கள் பணியிடம் வீதம் மொத்தம் 250 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் (ரூ.9300—34800 + தரஊதியம் 4600/—) ஆக மொத்தம் 350 பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டு ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. பார்வை இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில், 2013—2014ம் கல்வியாண்டில் 50 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தப்பட்டு அப்பள்ளிகளுக்கு தற்காலிகமாக தோற்றுவிக்கப்பட்ட 50 தொடக்கப் பள்ளி தலைமையாசிரியர், 50 உயர்நிலைப் பள்ளி தலைமையாசிரியர் மற்றும் பள்ளி ஒன்றுக்கு 5 பட்டதாரி ஆசிரியர்கள் பணியிடம் வீதம் மொத்தம் 250 பட்டதாரி ஆசிரியர் ஆக மொத்தம் 350 பணியிடங்களுக்கு 17.9.2014 முதல் 31.12.2015 வழங்கி அரசு ஆணை வெளியிடப்பட்டுள்ளது. 01.01.2016 முதல் தொடர் நீட்டிப்பு வழங்குவது குறித்த கருத்துரு தனியே பரிசீலிக்கப்பட்டு வருகின்றன.

3. மேலே பார்வை 3ல் காணும் பள்ளிக் கல்வி இயக்குநரின் கடிதத்தில் 01.01.2016 முதல் 31.03.2016 வரை மூன்று மாதங்களுக்கு துறைத் தலைவருக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின் அடிப்படையில் தொடர்ந்து ஊதியம் பெற அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்றும், தொடர் நீட்டிப்பு வழங்குவதில் காலதாமதம் ஏற்படும்பட்சத்தில் ஏப்ரல் 2016 முதல் மூன்று மாதங்களுக்கு ஊதியம் வழங்கும் அதிகார ஆணை (Pay Authorisation) வழங்கும்படி அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

4. தொடர் நீட்டிப்பு வழங்குவது குறித்த பள்ளிக் கல்வி இயக்குநரின் கருத்துரு, அரசின் பரிசீலனையில் உள்ளதால், 2013–2014ம் கல்வியாண்டில் தரம் உயர்த்தப்பட்ட அந்த உயர் நிலைப் பள்ளிகளுக்கு 50 தொடக்கப் பள்ளி தலைமையாசிரியர், 50 உயர்நிலைப் பள்ளி தலைமையாசிரியர் மற்றும் பள்ளி ஒன்றுக்கு 5 பட்டதாரி ஆசிரியர்கள் பணியிடம் வீதம் மொத்தம் 250 பட்டதாரி ஆசிரியர் ஆக மொத்தம் 350 தற்காலிக பணியிடங்களுக்கு சம்பளம் மற்றும் இதர படிகளுக்கான ஊதியம், உரிய அலுவலர்களால் தாக்கல் செய்யப்படும் ஏப்ரல் மற்றும் மே 2016 மாதங்களுக்கான சம்பளப் பட்டிகளை அவை ஏனைய இனங்களில் சரியாக இருக்கும் நிலையில் ஏற்றுக் கொண்டு சம்பளம் அனுமதிக்குமாறு தங்களை கேட்டுக் கொள்ளப் பணிக்கப்பட்டுள்ளேன்.

5. இக்கடிதம் நிதித்துறையின் அ.சா.எண்.30393/கல்வி-II/2016, நாள் 31.05.2016ல் பெற்ற ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

தங்கள் உண்மையுள்ள,

(அரசு சார்புச் செயலாளர்)
அரசு முதன்மைச் செயலாளருக்காக.

2/6/16

நகல்
பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை–6.
நிதி (கல்வி–II) துறை, சென்னை–9.
அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்.